# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2340/41 - 2023 ජූලි මස 12 වැනි බදාදා - 2023.07.12

*2340/41 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 12 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/ 1978 (X)(ஈ)*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV 62877 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதும் பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில், சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் 2022, மாச்சு 30 ஆந் திகதிய 2273/ 43 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதன் நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற "கணக்கியல் மற்றும் நிதியியல் முகாமைத்துவ இளமாணி (சிறப்பு)" என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I மற்றும் நிரல் II இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன் :-*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, ஆகக்குறைந்தது 120 திறமைச் சித்திகளை (SLQF) மட்டம் 6) பூர்த்தி செய்து தகவல் தொழில்நுட்பத்தில் கல்வி இளமாணி தொடர்பில், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் போது, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் அதற்குச் சமமானதில் ஒரே தடவையில், ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் :


1A - PG 6386 — 286 (2023/07)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. ஹொரைசன் கொலிஜ் ஒப் பிஸ்னஸ் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்தாண்டுகளுக்கு (5) மீள் பரிசீலனைக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது.

**அட்டவணை II**

| *நிரல் I*<br>*பட்டம்* | *நிரல் II*<br>*பட்டத்துக்கான சுருக்கீடு* |
|---|---|
| தகவல் தொழில்நுட்பவியலில் கல்வி இளமாணி (சிறப்பு) | பிஈடி சிறப்பு (தகவல் தொழில்நுட்பவியல்) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, மே 03.

EOG 07-0097/ 1

---

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1)(ஆ) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், GL 24 என்னும் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் இன்போமேஷன் டெக்னோலொஜி (கரன்ட்டி) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழ் அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, பட்டமளிக்கும் நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்படுவதனால், சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டதும் 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி 7 ஆந் திகதிய 2216/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை I இனை, அட்டவணை I இலுள்ள நிபந்தனை 1 ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

"1. குறைந்தபட்சம் 120 திறமைச் சித்திகளைப் பூர்த்திசெய்து (SLQF மட்டம் 6), நிதியியல் கணிதம் மற்றும் பிரயோகப் புள்ளிவிபரவியலில் சிறப்பு விஞ்ஞான இளமாணி எனத் தலைப்பிடப்பட்ட கற்கைநெறி தொடர்பில் மாணவரொருவரைச் சேர்த்துக்கொள்வதற்கான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகள், இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க. பொ. த. (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில், பிரதான பாடமொன்றாக இணைந்த கணிதம் உட்பட ஏதேனும் பாடத்துறையில் மூன்று (3) சாதாரண சித்திகளாக (S) அல்லது அதற்குச் சமமான தகைமையாக இருத்தல் வேண்டும்.".

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த** (பா. உ.),
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2023, யூலை 12.

EOG 07-0097/2

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.